The Hon. Thiru Si. Pa. ADITANAR: This question does not relate to agricultural colonies or poramboke lands. The question is about land development banks.

Thiru T. MARTIN: In our State there is an allergy for big people to enter into the co-operative department, because the responsib lity for any defalcation is constructively placed on the President or office bearers.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிலவள வங்கி பற்றிக் கேளுங்கள்.

Thiru T. MARTIN: May I request the Hon. Minister to state whether the Department will put a cashier who will be responsible for defalcations and also for keeping of correct accounts?

The Hon. Thiru Si. Pa. ADITANAR: In the Land Development Bank Act which was passed last year, the Government have made provision more or less on the lines indicated by the hon. Member.

மத்திய கூட்டுறவு நிலவள வங்கியினரால் கோரப்பட்ட உறுதிமொழி

*668 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு மத்திய கூட்டுறவு நிலவள வங்கியினர் தங்கள் கடன் ஈட்டுப் பத்திரத்துக்கு 75 கோடி ரூபாய்க்கு அரசிடம் உறுதிமொழி கேட்டுள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) அரசின் உத்தரவாதத்தை ரூ. 75 கோடிக்கு உயர்த்தி, அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

அருப்புக்கோட்டை கூட்டுறவு நிலவள வங்கி ஊழியர்கள்

*669 வினா—திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை கூட்டுறவு நிலவள வங்கி [-D.R.L-(S) Ltd] ஊழியர்களிடமிருந்து 8—1—1970-ம் தேதியிட்ட விண்ணப்பம் அரசாங்கத்திற்கும், அமைச்சர்களுக்கும் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1970 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) புதிய ஆரம்ப நிலவள வங்கிகளில் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கையில் பழைய வங்கிகளிலுள்ள உபரி ஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளது.

Delivery van owned by Super Market at Vellore

* 670 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the "Karpagam" Co-operative Super Market run by the North Arot District Co-operative Supply and MarketSociety Limited, Vellore owns a van guard delivery van; and

(*b*) whether the vehicle is used by the Deputy Registrar-General Manager for his personal use?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம். சரக்குகள் விநியோகிக்க வண்டி ஒன்று இந்தச் சிறப்பங்காடிக்குச் சொந்தமாக உள்ளது.

(இ) இல்லை. அவ்வண்டி மானேஜரால் அலுவலகக் காரியங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

திரு. கே. விநாயகம் : சிறப்பங்காடிக்குச் சொந்தமான வண்டியை மானேஜர் அவர்கள் அலுவல் காரணமாகப் பயன்படுத்துவதில் எவ்வித அபிப்பிராயபேதமும் இல்லை. ஆனால் அது முடிந்த பிறகு இரவிலும், மாலை நேரத்திலும் அவர்கள் தன் சொந்தக் காரியங்களுக்காக அதைப் பயன்படுத்துகிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அங்கேயும் புகார் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள், இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிற்பாடு அதையே கேட்கலாமா?

Thiru K. VINAYAKAM : Is it God's truth? Should I not pry into the secret and try to pull out the answer? He says 'No'. Am I to take it as God's truth? That is not the intention of the question hour.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குக் கொடுக்கிற அறிக்கைகள், கருத்துக்கள் இவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் உண்மை, அதுதான் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பது ஒரு மரபு. அது தவறாக இருந்தால் அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள், இன்ன நேரத்தில் இன்ன இடத்தில் எடுத்துக் கொண்டு போனார்கள் என்று சொல்ல உறுப்பினர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. உங்கள் கேள்வியில், அங்கே புகார் செய்கிறார்கள், அப்படிப்